11.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயி துவங்கி வைக்கும் மைசூரு தசரா விழா



மைசூரு:"மைசூரு தசரா ஜம்பு சவாரியின் போது, வெளி மாநில கலாசார குழுக்கள், அலங்கார ஊர்திகளுக்கு அனுமதியில்லை. டார்ச் லைட் பரேடில் நடத்தப்படும், வாண வேடிக்கை ரத்து செய்யப்படுகிறது" என, மாநில அமைச்சர் சீனிவாஸ் பிரசாத் தெரிவித்தார். மைசூரு தசரா விழாவின் 'லோகோ'வை, அறிமுகம் செய்த, வருவாய் துறை அமைச்சர் சீனிவாஸ் பிரசாத் நிருபர்களிடம் கூறியதாவது:தசராவுக்காக மைசூருவுக்கு வந்த யானைகளுக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. இரண்டாம் கட்ட யானைகள் குழு, இம்மாதம், 3வது வாரத்தில், வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி

காரணமாக, இந்தாண்டு தசரா விழாவை எளிமையாக கொண்டாட மாநில அரசு முடிவு செய்துஉள்ளது.

தசரா விழாவை விவசாயி ஒருவரை வைத்து துவக்க, முதல்வர் சித்தராமையா தலைமையிலான தசரா விழா கமிட்டி முடிவு செய்துள்ளது. மைசூரு அரண்மனை வளாகத்தில் நடக்கும் கலாசார நிகழ்ச்சிகளை முதல்வர் சித்தராமையா துவக்கி வைக்கிறார். டார்ச் லைட் பரேடில் நடத்தப்படும், வாண வேடிக்கை இந்த ஆண்டு இடம் பெறாது. கடந்தாண்டு கலாமந்திர், மஹாராஜா கல்லுாரி மைதானத்தில் நடந்து வந்த கலாசார நிகழ்ச்சிகளும், இந்தாண்டு

ரத்து செய்யப்பட்டுள்ளது; ஆனால், விவசாயிகள் தசரா நடக்கும்.ஜம்பு சவாரியின் போது, வெளி மாநில கலாசார குழுக்கள், அலங்கார ஊர்திகளுக்கு அனுமதியில்லை; ஆனால், உள்ளூர் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

## குமரியில் விடிய விடிய மழை

நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் இரவு பகல் இடைவெளி இல்லாமல் கொட்டி தீர்க்கும் மழையால் மாவட்டத்தில் குளுமையான காலநிலை நிலவுகிறது. கால்வாய்களில் தண்ணீர் பெருக்கெடுத்து, அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு பெய்யத் தொடங்கிய மழை விடிய விடிய பெய்து கொண்டே இருந்தது. ஆனைக்கிடங்கில் அதிகபட்சமாக 65 மி.மீ. மழை பதிவானது. கால்வாய்களில் நீர்வரத்து அதிகமானது. ஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

தொடர்ந்து வானத்தில் கருமேகங்கள் திரண்டு மேக மூட்டத்துடன் காணப்படுகிறது. நேற்று பகல் முழுவதும் விட்டு விட்டு சாரல் மழை

பெய்து கொண்டிருந்தது.கன்னிமார், இரணியல், புத்தன் அணை, முள்ளங்கினாவிளை, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, மாம்பழத்துறையாறு பகுதிகளில் அதிக அளவில் மழை பெய்தது. ஆனைகிடங்கில் அதிகபட்சமாக 65 மி.மீ. மழை பதிவானது. மாவட்டம் முழுவதும் பரவலாக அனைத்து இடங்களிலும் விடிய விடிய மழை பெய்ததால் இதமான குளிர்காற்று வீசுகிறது. கன்னியாகுமரி அருகே நாச்சிமார் குளம் நிரம்பி வழிகிறது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 37 அடியாக உள்ளது. அணைக்கு விநாடி 900 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

### காய்கறி வீழ்ச்சி:அவரைக்கு விலை

தேவாரம்:தேனி மாவட்டம் தேவாரம் பகுதியில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் காய்கறி சாகுபடி நடக்கிறது. மாவட்டத்தின் முக்கியமான தினசரி சந்தை தேவாரத்தில் இயங்குவதால் காய்கறி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். கூடுதல் விளைச்சல், வெளிமாநில தக்காளி வரத்தால் ஒரு பெட்டி (15 கிலோ) ரூ. 20க்கு விற்பனையானது.தோட்டத்திலிருந்து சந்தைக்கு வரும் வாடகை, கமிஷன், கூலி என ஒரு பெட்டிக்கு ரூ.20 க்கு மேல் செலவானதால் சில விவசாயிகள் தக்காளியை பறிக்காமல் விட்டுள்ளனர்.மற்ற காய்களும் கிலோ ரூ. 10 க்கு குறைவாக விற்பனையானது. குறைந்த பட்சமாக சாம்பார் வெள்ளரி கிலோ ரூ. 2க்கு விற்பனையானது. அதிகபட்சமாக அவரை கிலோ ரூ.35க்கு விற்பனையானது.

### அணைகளின் நீர்மட்டம் வேகமாக சரிவு



ஒரு மாதமாக, பாசனத்திற்காக தண்ணீர் எடுக்கப்படுவதால், முக்கிய அணைகளின் நீர் இருப்பு வேகமாக சரிந்து வருகிறது.தமிழகத்தில் உள்ள, 15 முக்கிய அணைகள் மூலம், பல மாவட்டங்களின் பாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தியாகிறது. பொதுப்பணி துறையின் அங்கமான, நீர்வளத்துறை கட்டுப்பாட்டில், இந்த அணைகள் உள்ளன.

இந்த அணைகளில் இருந்து, பயிர் சாகுபடிக்காக, ஒரு மாதமாக தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. அதனால், நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. 15 அணைகளின் மொத்த நீர் கொள்ளளவு, 197.7 டி.எம்.சி.,யாகும். தற்போது, 86.6 டி.எம்.சி., மட்டுமே, நீர் இருப்பு உள்ளது. அவ்வப்போது பெய்யும் மழையால், இந்த அணைகளுக்கு நீர்வரத்தும் கிடைத்து வருகிறது. - நமது நிருபர்- -

## ரூ.3 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

zநாமக்கல்: வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த பருத்தி ஏலத்தில், 3 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில்

பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 200 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,669 , குறைந்த பட்சம், 4,200 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 5,105 குறைந்த பட்சம், 4,600 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 200 மூட்டை பருத்தி, 3 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**மாவட்டத்தில் விவசாய பணிக்கு தொழிலாளர்கள் பற்றாக்குறை: இயந்திரத்தில் நடவு செய்தால் ரூ. 3,000 மானியம்**

கரூர்: தமிழகத்தில், விவசாயப்பணிக்கு தொழிலாளர்கள் பற்றாக்குறை அதிகரிக்க துவங்கியதால், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், ஹெக்டருக்கு, 3,000 ரூபாய் மானியமாக வழங்க, வேளாண் துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில், மேட்டூர் அணை மூலம், சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை, நாகை, கடலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில், 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேட்டூர் அணையில் இருந்து, சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால், கரூர் மாவட்டத்தில்,

குளித்தலை, அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் ஆகிய காவிரி கரையில் பகுதிகளில், சம்பா சாகுபடியில் நாற்று நடவுக்கான ஆயத்த பணிகள் துவங்கி உள்ளன. மாவட்டத்தில், 15 ஆயிரத்து, 400 ஹெக்டேர் பரப்பில், சம்பா மற்றும் குறுவை சாகுபடி செய்யப்படுகிறது.

தொழிலாளர் பற்றாக்குறை: மேட்டூர் அணையில் இருந்து, சம்பா சாகுபடிக்கு, தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடி செய்வதற்கான அனைத்து அடிப்படை பணிகளான வயல்களை திருத்துவது, நாற்றங்கால் நடுவது உள்ளிட்ட பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும், 137 நாள்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைத்தால் மட்டும், நெல் விளைச்சலாகும். இந்நிலையில், இளைய தலைமுறையினர், விவசாய பணியை விரும்பாமல், கரூர், ஈரோடு, கோவை மாவட்டங்களில் உள்ள தனியார் நிறுவனங்களை நாடிச் சென்று விடுகின்றனர். அதனால், விவசாய பணிக்கு, தொழிலாளர்கள் தட்டுபாடு கடுமையாக நிலவி வருகிறது. தொழிலாளர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், விவசாயத்தை ஊக்கப்படுத்தும் வகையில், வேளாண்மை துறையும் பல்வேறு நடவடிக்கையும் இறங்கி உள்ளன. விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்தால், ஒரு ஹெக்டருக்கு, 3,000 ரூபாய் மானியம் வழங்க வேளாண் துறை உத்தரவிட்டுள்ளது.

விதை நெல் தயார்: இதுகுறித்து, கரூர் வேளாண்மை துறை இணை இயக்குனர் மதனகோபால் கூறியதாவது: கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை, செப்டம்பர் மாதம் இறுதி, அக்டோபர் மாதத்தில், நெல் சாகுபடி பணி தீவிரமாகும். சம்பா சாகுபடி தேவைக்கு, 256 டன் விதை நெல் தயார் நிலை உள்ளது. இதில், 1,437 டன் யூரியா இருப்பு, 628 டன் டி.ஏ.பி., இருப்பு, 901 டன் பொட்டாஷ் இருப்பு, கலப்பு, 973 டன், உயிர் உரம், 12 ஆயிரம், 500 கிலோ தயார் நிலையில் உள்ளது.

ரூ.3,000 மானியம்: விவசாய பணிக்கு ஆட்கள் பற்றாகுறை போக்கும் வகையில், கரூர் மாவட்டத்தில், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்ய, 2,800 ஹெக்டர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், தனியார் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்திருந்தால், நேரடியாக பார்வையிட்டு, விவசாயிகளின் கணக்கில், ஹெக்டருக்கு, 3,000 ரூபாய், மானியமாக செலுத்தி விடுவோம். இவ்வாறு, அவர் கூறினார்.

## தக்காளி விலை ரூ.2 ஆக சரிந்தது: செடியில் வீணாகும் அவலம்




பழநி : தக்காளி விலை கிலோவுக்கு ரூ.2 ஆக வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் அவற்றை பறிக்காமல் செடியிலேயே விட்டுவிடுகின்றனர்.

திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, தொப்பம்பட்டி, கரடிக் கூட்டம், பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. ஒட்டன்சத்திரம், பொள்ளாச்சி மார்க்கெட் மூலம் கேரளா, ஆந்திரா, கோல்கட்டாவிற்கு செல்கிறது. கடந்த சில வாரங்களாக தக்காளி வரத்து அதிகரிப்பால் மார்க்கெட்டில்

பெட்டி(15கிலோ) தரமான பழங்கள் ரூ.30 முதல் ரூ.40 வரை ஏலம் போகிறது. சுமாரான பழங்களை வியாபாரிகள் வாங்காததால் அவற்றை விவசாயிகள் ரோட்டோரம் கொட்டுகின்றனர். விலை வீழ்ச்சியால் மருந்து, உரம், பறிப்புக் கூலிபோக முதல்கூட கிடைக்காததால், விவசாயிகள் தக்காளியை பறிக்காமல் செடியிலேயே விட்டுள்ளனர். அவை உதிர்ந்து கால்நடைகளுக்கு உணவாகிறது. வில்வாதம்பட்டி விவசாயி நடராஜன் கூறுகையில்,"" எங்கள் பகுதியில் 500 குழி தக்காளி பயிரிடுகிறோம். ஒரு ஏக்கருக்கு நாற்று, உரம், மருந்து என ரூ.20ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை செலவாகிறது. வரத்து அதிகரிப்பு காரணமாக கிலோ ரூ.2க்கு விற்பதால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் தக்காளியை பறிக்காமல் விட்டுவிட்டோம்," என்றார்.

## நெற்பயிரில் புகையான் தாக்குதல்; தோட்டக்கலை பேராசிரியர்கள் ஆய்வு

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் புகையான் தாக்குதலால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து தோட்டக்கலை பேராசிரியர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் இருபோக நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. தற்போது முதல் போக நெல் சாகுபடி நடக்கிறது. கடந்த சில வாரங்களாக கம்பம் பள்ளத்தாக்கில் நெல் பயிரில் புகையான் தாக்குதல் காணப்படுகிறது. விவசாயத்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்தபோதும், பெரியகுளம் தோட்டக்கலை பூச்சியியல் பேராசிரியர் சுரேஷ், நோயியல் துறை பேராசிரியர் தேரடிமணி, உதவி இயக்குனர் அசோகன் ஆகியோர் கம்பம், சுருளிப்பட்டி, உத்தமபாளையம், காமயகவுண்டன்பட்டி ஆகிய பகுதிகளில் நெல் வயல்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

அவர்கள் கூறியதாவது: ஒரு தூருக்கு ஒரு தத்துப்பூச்சி இருக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பூச்சிகள் இருந்தால் அவற்றை கட்டுப்படுத்த வேண்டும். வயலில் நீரை முழுவதும் வடித்து விட வேண்டும். சூரியஒளி தூர்களில் நன்கு படும்படி செய்ய வேண்டும். ஒரு எக்டருக்கு வேப்பஎண்ணெய் 15 லிட்டர் தண்ணீரில் 3 சதவீதம் அல்லது 30 லிட்டர் தண்ணீரில் 6 சதவீத இலுவுப்பை எண்ணைய், 25 கிலோ தண்ணீரில் வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் தெளிக்க வேண்டும். இமிடோகுளோபிட் ஹெக்டேருக்கு 100 முதல் 125 மில்லி, அல்லது பைப்ரோனில் ஒரு எக்டருக்கு ஆயிரம் மில்லி அல்லது பியூபரோபெசின் 800 மில்லி, புரோபனபாஸ் ஆயிரம் மில்லி இதில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். பயிர் நடவு செய்யும் போது 22.5 செ.மீ., இடைவெளி விட்டு நடவுசெய்தால் புகையான் தாக்குதல் குறையும், என்றார்.

## திராட்சை ஆராய்ச்சி நிலைய அலுவலகம் இடமாற்றம்

உத்தமபாளையம் : ராயப்பன்பட்டியில் செயல்பட்டு வந்த திராட்சை ஆராய்ச்சி நிலைய அலுவலகம், ஆராய்ச்சி நிலைய புதிய கட்டடம் அமைந்துள்ள பகுதிக்கு திடீரென மாற்றப்பட்டது.சில ஆண்டுகளுக்கு முன்பு ஆனைமலையன்பட்டியில் சண்முகாநதி அணை அருகில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டது. புதிய அலுவலக கட்டடம் மற்றும் ஆய்வகம், கூட்ட அரங்கு போன்றவைகள் கட்ட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 56 லட்சம் செலவில் புதிய ஆராய்ச்சி நிலையத்திற்கு கட்டடம் கட்டப்பட்டு திறப்பிவிழாவிற்கு தயாராக உள்ளது.இந்நிலையில் திராட்சை ஆராய்ச்சிநிலையத்திற்கென தற்காலிக அலுவலகம் ராயப்பன்பட்டி மெயின்ரோட்டில் வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது. வாடகை ஒப்பந்தம் 2 ஆண்டுகள் முடிவடைந்தநிலையில், ஆராய்ச்சி நிலைய தலைவர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா ஆகியோர் அலுவலகத்தை, புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ள பகுதிக்கு மாற்றிக் கொள்ள முடிவு செய்தனர்.

இதையடுத்து திராட்சை ஆராய்ச்சி நிலைய அலுவலகம், புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ள இடத்திற்கு அருகில் சிறிய தற்காலிக கட்டடத்தில் இயங்கத் துவங்கியுள்ளது.

**காளான் வளர்ப்பு பயிற்சி**

திருப்புத்தூர்: பிள்ளையார்பட்டி பி.என்.பி., உழவர் பயிற்சி மையத்தில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது. இயக்குநர் குறிஞ்சிநாதன் தலைமை வகித்தார். சிவகங்கை மன்னர் மேல்நிலை பள்ளி பிளஸ் 2 வேளாண்மை பிரிவு மாணவர்கள் பங்கேற்றனர். காளான் வகைகள், வளர்ப்பு, விற்பனை குறித்து பயிற்சி அளித்தனர். ஆசிரியர் செல்வக்குமார் நன்றி கூறினார்.

**கர்நாடகத்தில் செப்.15 வரை மழைக்கு வாய்ப்பு**

கர்நாடகத்தில் செப்.15-ஆம் தேதி வரை பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வுமையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடந்த 24 மணி நேரத்தில் வட கர்நாடகத்தின் உள்பகுதியில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்திருந்தது. இதே காலக் கட்டத்தில்

கடலோர கர்நாடகத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், தென் கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளிலும் மழை பெய்தது.

தார்வாட் மாவட்டத்தில் நவலகுந்தாவில் 100 மி.மீட்டர், யாதகிரி மாவட்டத்தில் சைதாபூரில் 90 மி.மீட்டர், பாகல்கோட்டை மாவட்டத்தில் லோகாபூர், ராய்ச்சூரு மாவட்டத்தில் சிந்தனூரில் தலா 80 மி.மீட்டர், விஜயபுரா மாவட்டத்தில் நாகதன், ராய்ச்சூரு மாவட்டத்தில் தியோதுர்கில்லில் தலா 70 மி.மீட்டர், கலபுர்கி மாவட்டத்தில் கலபுர்கி, எத்ராமி, ராய்ச்சூரில் தலா 60 மி.மீட்டர் மழை பதிவாகின. கடலோர கர்நாடகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், வட, தென் கர்நாடகத்தின் உள் பகுதிகளில் வெள்ளிக்கிழமை முதல் 15-ஆம் தேதி வரையில் மிதமானது முதல் மிகவும் பலத்த மழை

வானிலை முன்னறிவிப்பு: அடுத்த 48 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம் மற்றும் வடகர்நாடகத்தின் உள்பகுதியில் பலமான மழை பெய்யக்கூடும். கடலோரகர்நாடகம் மற்றும் தென்கர்நாடகத்தின் உள்பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும்.

மேலும், பெங்களூரில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஒருசில பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. இந்த 2 நாள்களில் பெங்களூரில் தட்பவெப்பம் அதிகபட்சமாக 28 டிகிரி மற்றும் குறைந்தபட்சமாக 20 டிகிரி செல்சியசாக இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குதிரைவாலி சாகுபடி குறித்த பயிற்சி முகாம்

விருதுநகர் மாவட்டம் கத்தாளம்பட்டி கிராமத்தில் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் வேளாண்மை இயக்கம் சார்பில் குதிரைவாலி பயிர் சாகுபடி குறித்த முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு குழு அமைக்கப்பட்டது. குழுவில் உள்ள விவசாயிகள் தலா ஒரு ஏக்கர் பரப்பளவில் குதிரைவாலி பயிர் செய்ய பயிற்சி வழங்கப்பட்டது. ம.ரெட்டியபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் நாச்சியார் அம்மாள் விவசாயிகளுக்கு குதிரைவாலி அங்கக சாகுபடி பற்றி விளக்களித்தார்.

தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு குதிரைவாலி விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன. வேளாண்மை உதவி அலுவலர் ஜெயபாண்டியன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## இயற்கை விழிப்புணர்வு விழா

உடுமலை ஆர்ஜிஎம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் "எகோ-பெஸ்ட்-2016' என்ற இயற்கை பாதுகாப்பு விழிப்புணர்வு விழா, கண்காட்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட வன அலுவலர் சி.திவ்யா இக்கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். உடுமலை வனச்சரகர் சுப்பையன் முன்னிலை வகித்தார். இயற்கை, மரங்களைப் பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் ஏராளமான படைப்புகள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. இதில், பழுதடைந்த மின் சாதனங்கள் மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது, வீட்டில் இயற்கையான முறையில் காய்கறிகள் வளர்ப்பு, மறுசுழற்சி மூலம் செடிகளுக்கு நீர் பாசனம் என்பன உள்ளிட்ட பல்வேறு படைப்புகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆரண்யா அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் நந்தினி ரவீந்திரன், செயல் அலுவலர் கார்த்திகேயன், பள்ளி முதல்வர் வெங்கடஸ்ரீ, ஆசிரியர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்: உதவி இயக்குநர் திடீர் ஆய்வு**

கோபிசெட்டிபாளையம் கோட்டத்திற்கு உள்பட்ட பகுதிகளில் கால்நடைத் துறை சார்பில் நடைபெறும் கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்களை உதவி இயக்குநர் வியாழக்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

தமிழகத்தில் கடந்த ஆண்டு கோமாரி நோயால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன. ஈரோடு மாவட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன. அதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தமிழக அரசு சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் இலவசமாக கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டு வந்தன.

இந்நிலையில், கால்நடைகளுக்கு 9-ஆம் சுற்று கோமாரி நோய்த் தடுப்பூசிகள் செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை போடப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில் கோபிசெட்டிபாளையம் கோட்டத்திற்கு உள்பட்ட சத்தி, கோபி, அந்தியூர், பவானி ஆகிய தாலுகாக்களில் உள்ள 175-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 2 லட்சத்து 40 ஆயிரத்து 300 கால்நடைகளுக்கு கோமாரித் நோய் தடுப்பூசிகள் போடத் திட்டமிடப்பட்டது.

இதையடுத்து, ஒரு உதவி கால்நடை மருத்துவர், ஆய்வாளர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் அடங்கிய 76 குழுக்கள். காலை 7 முதல் 10 மணி வரையிலும், மாலை 4 முதல் 6 மணி வரையிலும் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கால்நடை பராமரிப்புத் துறையின் சென்னை முதன்மை அலுவலக உதவி இயக்குநர் சரவணபவா, கோபிசெட்டிபாளையம் அருகில் உள்ள பிச்சாண்டம்பாளையத்தில் நடைபெற்ற கோமாரி நோய்த் தடுப்பூசி முகாமை ஆய்வு செய்தார்.

தமிழகத்தில் தற்போது வரை 50 சதவீதம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும், செப்டம்பர் 21-ஆம் தேதிக்குள் 100 சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தோட்டக்கலை சாகுபடி விவசாயிகளுக்கு ரூ.2.80 கோடியில் மானியம்: ஆட்சியர்

சிவகங்கை மாவட்டத்தில் 2015- 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.2.80 கோடி மானியம் வழங்கப்படவுள்ளதாக ஆட்சியர் ச. மலர்விழி தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 13,500 ஹெக்டேர் பரப்பில் பழமரங்கள், முந்திரி, காய்கறி மற்றும் மலர் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த பயிர்களின் சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும், நவீன தொழில் நுட்பங்களை கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் வகையிலும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது. சாகுபடி பரப்பு விரிவாக்கத்தைப் பொறுத்தவரை ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 4 ஹெக்டர் பரப்பிற்கு வழங்கப்படுகிறது. வீரிய ஒட்டு காய்கறி விவசாயத்தில் வெண்டை, கத்தரி, தக்காளி, மற்றும் மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு காய்கறி நாற்றுகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ளது. ஒரு ஹெக்டர் பரப்பிற்கு ரூ.20 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாறு 200 ஹெக்டேர் ரூ.40 லட்சம் மானியத்தில் செயல்படுத்தபடவுள்ளது. அதேபோல், மா அடர் நடவு சாகுபடியில், ஒரு ஹெக்டர் பரப்பில் 5 மீ இடைவெளியில் நடவு செய்யும் உயர் விளைச்சல் தரும் மா ஒட்டுக்

கன்றுகள் விவசாயிகளுக்கு ரூ.9,840 மானியத்தில் விநியோகிக்கப்படவுள்ளது. இதில், மொத்தம் ரூ.6.88 லட்சம் மானியம் வழங்கப்படவுள்ளது. கொய்யாவில் ஒரு ஹெக்டர் உயா விளைச்சல் ரக கொய்யா சாகுபடி செய்ய ரூ.17,599 மானியத்தில் கன்றுகள் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு 30 ஹெக்டேர் பரப்பில் கொய்யா கன்றுகள் வழங்க விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.2.28 லட்சம் மானியம் வழங்கப்பட்ட உள்ளது. அதேபோல், குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரும் வீரிய ஒட்டு பப்பாளி ரகங்கள் 130 ஹெக்டேரில் சாகுபடி செய்ய ரூ. 29.25 லட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. ஒரு ஹெக்டர் சாகுபடிக்கு ரூ.22,500 மானியம் வழங்கப்படுகிறது. மேலும், முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,000 என்ற விகிதத்தில் முந்திரி ஒட்டுக் கன்றுகள் மற்றும் இடுபொருள்கள் 100 ஹெக்டேர் பரப்பிற்கு வழங்கப்படவுள்ளது.

மலர் பயிரான மல்லிகை சாகுபடியை ஊக்குவிக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ.16,000 மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 80 ஹெக்டேர் பரப்பில் மல்லிகை சாகுபடிக்கு மானியம் வழங்கப்படவுள்ளது. ஒரு சதுர மீட்டருக்கு ரூ.468 மானியத்தில் 10,000 ச.மீ பரப்பில் பசுமைக்குடில் அமைக்க விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமாக ரூ.46.75 லட்சம் வழங்கப்படவுள்ளது.

இதே போன்று நிழல் வலை கூடங்கள் அமைத்து சாகுபடி மேற்கொள்ளவும் வீரிய ஒட்டு நாற்றுகள் உற்பத்தி செய்யவும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.355 மானியத்தில் மொத்தம் 10,000 ச.மீ. பரப்பில் நிழல்வலை அமைக்க ரூ.35.5 லட்சம் மானியம் வழங்கப்படவுள்ளது. நிலத்தில் உள்ள ஈரப்பதம் ஆவியாவதைத் தடுக்க நிலப்போர்வை அமைக்க ஒரு ஹெக்டருக்கு ரூ.16,000 மானியத்தில் 100 ஹெக்டேர் பரப்பில் நிலப்போர்வை அமைக்க விவசாயிகளுக்கு ரூ.16 லட்சம்

மானியம் வழங்கப்படவுள்ளது. இதே போன்று தேனி வளர்ப்பு, விவசாய கருவிகள் வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது. அதனால், தோட்டக்கலை பயிர் செய்யும் விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற, வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

## தோட்டக்கலை மாணவிகளுக்கு பயிற்சி

பெரியகுளம் தோட்டக் கலை கல்லூரியைச் சேர்ந்த உத்தமபாளையம் குழு மாணவிகளுக்கு, தேவாரம், கம்பம் ஆகிய பகுதிகளில் கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் செவ்வாய்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

தேவாரம் பகுதியில் மர வள்ளிக் கிழங்கில் வைரஸ் நோய் தாக்குதலுக்கு காரணமான வெள்ளை ஈக்களை இனக் கவர்ச்சி பொறி மூலம் கட்டுப்படுத்துவது, வாழையில் தண்டு துளைப்பான் நோயைக் கட்டுப்படுத்துதல் ஆகியன குறித்து, தேவாரம் உதவி வேளாண்மை அலுவலர் பாண்டியன் மாணவிகளுக்கு பயிற்சி அளித்தார். பின்னர், கம்பம் உழவர் சந்தையை மாணவிகள் பார்வையிட்டு, காய்கறி வரத்து, தரம் பிரிப்பு, விலை நிர்ணயம், விற்பனை ஆகியன குறித்து, உழவர் சந்தை விவசாய அலுவலர்கள் மற்றும் விவசாயிகளைக் கேட்டறிந்தனர்.

## 1,000 மெகாவாட் சூரிய ஒளி மின்சார உற்பத்திக்கான வரைவுக் கொள்கை

தலைநகரில் வரும் 2020-ஆம் ஆண்டுக்குள் 1,000 மெகாவாட் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான வரைவுக் கொள்கையை தில்லி டயலாக் ஆணையம் (டிடிசி) வியாழக்கிழமை வெளியிட்டது.

இதுதொடர்பாக 15 தினங்களுக்குள் பொதுமக்கள் கருத்தை அறிந்து அதன் பிறகு இறுதி அறிக்கையை தில்லி அரசிடம் ஆணையம் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

தில்லியில் சூரிய ஒளி மின்சக்தித் திட்டத்தைச் செயல்படுத்த தில்லி அரசு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இதற்கான வரைவுக் கொள்கைத் திட்டத்தை தயாரிக்குமாறு தில்லி அரசுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பான தில்லி டயலாக் ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி, கடந்த ஆகஸ்ட் 25-ஆம் தேதி பல்துறை வல்லுநர்கள், தன்னார்வ அமைப்புகள் உள்பட பல்வேறு துறைப் பிரதிநிதிகளுடன் கொள்கைத் திட்டம் தொடர்பாக தில்லி அரசு ஆலோசனை நடத்தியது.

இதைத் தொடர்ந்து, திட்டத்துக்கான வரைவுக் கொள்கையை தலைமைச் செயலகத்தில் தில்லி டயலாக் ஆணையத்தின் துணைத் தலைவர் ஆஷிஷ் கேதான் வியாழக்கிழமை வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

தலைநகரில் வரும் 2020-ஆம் ஆண்டுக்குள் சூரிய ஒளியைப் பயன்படுத்தி 1,000 மெகாவாட் (1ஜிகா) அளவுக்கு மின்சாரத்தையும், அதைத் தொடர்ந்து 2025-ஆம் ஆண்டுக்குள் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தையும் உற்பத்தி செய்யும் நோக்கில் இந்த வரைவுக் கொள்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**சூரிய எரிசக்தி மூலம் தூய, வாங்கக்கூடிய விலையிலான மின்சக்தியை அளிக்கவும்,**

தில்லியின் மின்சாரத் தேவையில் தன்னிறைவு பெறவும் இந்தக் வரைவுக் கொள்கைத் திட்டம் உதவியாக இருக்கும்.

சூரிய ஒளி மின்சக்தி நிலையத்தின் சராசரி ஆயுள்காலம் 25 ஆண்டுகள் என்பதால், 17-18 ஆண்டுகள் குடும்பத்தினர் மின்சாரத்தை இலவசமாகப் பெற முடியும். அதேபோன்று, வர்த்தக, தொழில், அரசு நிறுவனங்களுக்கும் இந்த சூரிய மின் சக்தி திட்டம் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் ரூபாயைச் சேமிக்க முடியும்.

தில்லியில் தற்போது கூரை மீது அமைக்கப்படும் சூரிய எரிசக்தி மின் கட்டணமானது யூனிட் ஒன்றுக்கு ரூ.6-ரூ.8 வருகிறது. இது அடுத்த 25 ஆண்டுகளுக்கு தொடர்ந்து அப்படியேதான் இருக்கும். ஆனால், மின் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் மின்சாரத்திற்கான விலை ஆண்டுதோறும் கூடிக் கொண்டுதான் இருக்கும்.

சூரிய மின் சக்தி அமைப்பை அதிகரிப்பதன் மூலம் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.6-க்கு பெற முடியும். இது அடுத்து வரும் 25 ஆண்டுகளுக்கும் நீடிக்கும். இந்த சூரிய ஒளி மின்சக்தி உற்பத்திக்கான தகடுகளை அமைப்பதற்காக அரசு எந்தவித மானியமும் அளிக்கக் கூடாது என்று பரிந்துரைத்துள்ளோம். அதேவேளையில், மின்சார உற்பத்தியை மேம்படுத்த ஊக்கத்தொகை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய வரைவுக் கொள்கைத் திட்டமானது டிடிசியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதுகுறித்த கருத்துகள் பொதுமக்களிடம் இருந்து 15 தினங்களுக்குள் பெறப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுவதற்காக தில்லி அரசிடம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார் ஆசிஷ் கேதான்.

## "திராட்சை கொள்முதல்மையங்களை தொடங்க வேண்டும்'

கர்நாடகத்தில் திராட்சை கொள்முதல் மையங்களைத் தொடங்க அரசு முன்வர வேண்டும் என்று, அந்த மாநில திராட்சை விவசாயிகள் சங்கத்தின் செயலர் வெங்கடரமண ரெட்டி வலியுறுத்தினார்.

இதுகுறித்து பெங்களூரில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

தேசிய அளவில் திராட்சை விற்பனையில் கர்நாடகம் சிறந்து விளங்குகிறது. மாநிலத்தில் சுமார் 4 ஆயிரம் ஹெக்டேரில் திராட்சை பயிரிடப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான விற்பனை சந்தைகள் அதிகம்

இல்லாததால், இடைத்தரகர்கள் மூலம் குறைந்த விலைக்கு திராட்சை விற்கப்படுகிறது. இதைத் தடுக்க திராட்சை கொள்முதல் மையங்களை அரசு தொடங்க முன்வர வேண்டும். திராட்சை விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பு திட்டங்களை அறிவிக்க வேண்டும். கேரளத்தில் திராட்சை விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக மது வகைகளுக்கு தடை விதித்து, ஒயின் விற்பனைக்கு சலுகை அளித்துள்ளது.

இதேபோல, கர்நாடகத்திலும் புதிதாக கொள்கை வகுத்து, திராட்சை விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் கர்நாடக திராட்சை விவசாயிகள் சங்கத்தின் தலைவரும், ஒயின் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் நிர்வாகியுமான என்.ரமேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விழிப்புணர்வு கூட்டம்

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம், மருங்கூர் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.ராமதாஸ் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற வேளாண்மை விற்பனை மற்றும் வணிக துறையின் வேளாண் அலுவலர் சுரேஷ், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பதின் நோக்கம், இதன் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பயன்கள், உள்கட்டமைப்பு ஏற்படுத்தும் வழிமுறை உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் திரளான விவசாயிகள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் நாகரத்தினம் செய்திருந்தார். உதவி வேளாண்மை அலுவலர் விஜியசண்முகம் நன்றி கூறினார்.

### மாவட்டத்தில் பரவலாக மழை

விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம், திருக்கோவிலூர், சங்கராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வியாழக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து, குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

விழுப்புரம் பகுதியில் மாலை வரை வெயில் காணப்பட்டது. மாலை 5 மணிக்கு மேல் திடீரென மழை பெய்யத் தொடங்கியது. சுமார் 15 நிமிடங்களுக்கு மேல் இந்த மழை நீடித்தது.

ஏற்கெனவே இப்பகுதியில் கடந்த சில நாள்களாக பெய்த மழை காரணமாக விழுப்புரம் ஆட்சியர் அலுவலக குடியிருப்பு, சுதாகர் நகர், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. இந்த மழையால் அப்பகுதியில் மேலும் மழைநீர் தேங்கியது. மார்கெட் வீதி, பாகர்ஷா வீதி உள்ளிட்ட பல்வேறு இடங்கள் சேரும், சகதியுமாக காட்சியளித்தன.

இதேபோல், திருக்கோவிலூர், சங்கராபுரம், செஞ்சி ஆகிய பகுதியிலும் லேசான மழை பெய்தது. கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, திண்டிவனம் போன்ற பகுதிகளில் மழை இல்லை.

### விவசாயிகளுக்கு பயிற்சி

திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் விவசாயிகளுக்கு அண்மையில் நடைபெற்றது.

முகாமுக்கு வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சா.ஷீபா முன்னிலை வகித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் சாகுபடி நிலப்பரப்பு குறைதல், நகரமயமாதல், வேலையாட்கள் பற்றாக்குறை, வெள்ளம், வறட்சி போன்ற பல காரணிகளால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே ஒருங்கிணைந்த பண்ணையத்தில் விவசாயம் சார்ந்த அதன் உப தொழில்களான கறவைப் பசு வளர்ப்பு, பரண்மேல் ஆடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, பண்ணைக்குட்டை அமைத்து மீன் வளர்ப்பு மற்றும் வேளாண் காடு வளர்ப்பு போன்றவற்றை பல்வேறு வேளாண் மண்டலங்களில் நன்செய், புன்செய் மற்றும் மானாவரி நிலங்களுக்கு ஏற்ற வகையில் எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்து விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது.

கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் மருத்துவர் ம.பாலுமகேந்திரன் மற்றும் பயிர் நோயியல் துறை வல்லுநர் கு.கவிதா ஆகியோர் இப்பயிற்சியினை விவசாயிகளுக்கு அளித்தனர்.

**புதுவையில் நாளை நாய்கள் கண்காட்சி**

புதுவையில் வரும் சனிக்கிழமை (செப்.12) எழில் மிகு நாய்கள் கண்காட்சி நடைபெறுகிறது.

இதுகுறித்து, கால்நடைத் துறை இயக்குநர் பி.பத்மநாபன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: முதன்மை வீட்டு விலங்கான நாய்களை மக்கள் ஆர்வத்துடன் வளர்த்து வருகின்றனர். சிறந்த பண்புள்ள நாய்களை சிறப்பிக்கும் விதமாக, நாய்கள் எழில் கண்காட்சியை கால்நடைத் துறை நடத்த உள்ளது.

புதுவை மறைமலை அடிகள் சாலை கால்நடை பராமரிப்புத் துறை அலுவலக வளாகத்தில் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இக்கண்காட்சி

நடைபெறுகிறது. புதுவையில் செல்லப் பிராணிகள் வளர்க்கும் அனைத்துத் தரப்பினரும் இந்தக் கண்காட்சியில் பங்குபெறலாம். அனுமதி இலவசம்.

நாய் வகைகளுக்குள் எழில் மிகு நாய்களைத் தேர்வு செய்தல் மற்றும் வளர்ப்பவரின் கட்டளைக்கு கீழ் படியும் நாய்கள் இதில் தேர்வு செய்யப்படும். இந்த இரு போட்டிகளிலும் பங்கேற்கும் சிறந்த 100 நாய்களை தேர்வு செய்து அதன் உரிமையாளர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க உள்ளது. இதைத்தொடர்ந்து, மாலை நடைபெறும் விழாவில், அரசுக் கொறடா நேரு பங்கேற்று பரிசுகளை வழங்குகிறார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பேரிடர் மேலாண்மை பயிற்சி முகாம்**

தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான பேரிடர் மேலாண்மை பயிற்சி முகாம் நடைபெற்றது.

இக் கல்லூரியின் தேசிய தரைப்படை மாணவர்களுக்கு 29 ஆவது பிரிவு சார்பில் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் து. நாகராஜன் தொடங்கிவைத்தார். ஸ்ரீ சத்ய சாய் பேரிடர் மேலாண்மைக் குழுவைச் சேர்ந்த சுரேஷ், ஆறுமுகம், ராஜா, கிரிஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில், நிலநடுக்கம், நிலச்சரிவு, புயல், வெள்ளம் போன்றவற்றில் உள்ள அடிப்படை அறிவியல் உண்மைகளை எடுத்துரைத்து, அப்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள்விளக்கினர்.

மேலும், பேரிடரின் போது மேற்கொள்ள வேண்டிய மீட்புப் பயிற்சிகள் தொடர்பாக மாணவர்கள் செயல்விளக்கம் அளித்தனர். ஏற்பாடுகளை லெப்டினட் ஹெலன் புளோரா செய்திருந்தார்.

## நெல்லையில் தானியங்கி விதை வழங்கும் இயந்திரம் திறப்பு

தமிழகத்தில் கோவை, மதுரைக்கு அடுத்தபடியாக திருநெல்வேலியில் தானியங்கி விதை வழங்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தில் பணம் செலுத்தி விரும்பிய விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

வீட்டுத் தோட்டம் அமைப்பதில் ஆர்வமுள்ளவர்கள், விவசாயிகளுக்காக தானியங்கி விதை வழங்கும் இயந்திர வசதி இதுவரை கோவை, மதுரையில் மட்டுமே இருந்து வந்தது. இப்போது, புதிதாக திருநெல்வேலியிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில், பாளையங்கோட்டையில் வேளாண் உதவி மையம் அமைந்துள்ளது. இந்த மையத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளும், விதைகள், இடுபொருள்கள் வழங்குதல், பரிசோதனை, பரிந்துரை என வேளாண் சார்ந்த அனைத்து உதவிகளும் வழங்கப்படுகின்றன. இப்போது, வீட்டுத் தோட்டத்தில் ஆர்வமுள்ளோருக்காக தானியங்கி விதை வழங்கும் இயந்திர வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு இயந்திரத்தின் திறப்பு விழா மைய வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு, கல்லூரி முதல்வர் வி. சுப்பிரமணியன் தலைமை வகித்தார். திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சி. சந்திரசேகரன், இயந்திரத்தை இயக்கி வைத்தார். முதல் விற்பனையை தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பி. சிவகுமார் பெற்றுக்கொண்டார்.

இந்த இயந்திரம் காய்கறிகள், மலர்ச் செடிகளுக்கான விதைகள் வழங்கும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. விதை

தேவைப்படுவோர் இயந்திரத்தின் வலதுபுறமுள்ள பகுதியில் தேவையான விதைகளைத் தேர்வு செய்து குறிப்பிட்ட எண்ணை அழுத்த வேண்டும்.

பின்னர், 10 ரூபாய் நோட்டை செலுத்திமிடத்தில் வைக்க வேண்டும். இதையடுத்து பணம் உள்ளே சென்று தேர்வு செய்த விதை பாக்கெட்டுகளை வெளியில் அனுப்பும். தானியங்கி பணம் எடுக்கும் இயந்திரத்தின் செயல்பாட்டைப்போல இந்த செயல்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை வேளாண் உதவி மையத்தில் தினமும் காலை 10 முதல் 5 மணி வரை இந்த இயந்திரம் செயல்பாட்டில் இருக்கும்.

முதல்கட்டமாக, கத்திரிக்காய், தட்டைப் பயறு, பீர்க்கன், பாகற்காய், புடலை, மிளகாய், தக்காளி விதைகள் வழங்கப்படும். தொடர்ந்து அடுத்தடுத்து அனைத்து வகை விதைகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக உதவி மையப் பேராசிரியர் சி. ராஜாபாபு தெரிவித்தார்.

விழாவில், வேளாண்மைக் கல்லூரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், மாணவர், மாணவிகள், விவசாயிகள், வீட்டுத் தோட்ட ஆர்வலர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

### பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் சில தினங்களாக பெய்த மழையால் வியாழக்கிழமை பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தென்மேற்கு பருவ மழை சரிவர பெய்யாததால், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர் இருப்பு வேகமாக சரிந்து வருகிறது. 84 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி அணையின்

நீர்மட்டம் 25 அடியாக குறைந்ததையடுத்து அணை மூடப்பட்டது. இதையடுத்து, கடனாநதி அணையின் பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள 4,500 ஏக்கர் நிலங்களில் நெற்பயிர் கருகும் சூழல் உருவாகியுள்ளது. இதனிடையே கடந்த சில தினங்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மிதமான மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நீர்வரத்து அதிகரிப்பு: மூன்று தினங்களுக்கு முன் 85 கனஅடி நீர்வரத்து இருந்த பாபநாசம் அணைக்கு, வியாழக்கிழமை 958.45 கனஅடியாக அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்து 52.55 அடியாக இருந்தது. இதேபோல் சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 600 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்து 65.32 அடியாகவும் இருந்தது. பாசனம், குடிநீர் தேவைக்காக பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து 504.75 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 250 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

### கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் கோமாரி தடுப்பூசி முகாம்

கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கோமாரி தடுப்பூசி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

6 மாதங்களுக்கு ஒருமுறை கோமாரி தடுப்பூசி முகாம் நடத்தி அனைத்து கால்நடைகளுக்கும் இலவசமாக தடுப்பூசி போட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் கோமாரி தடுப்பூசி முகாமை கால்நடைத் துறை இணை இயக்குநர் மோகனரங்கன் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் கடந்த வாரம் தொடங்கிவைத்தார்.

இதைத் தொடர்ந்து, மாவட்டம் முழுவதும் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது. கந்தர்வகோட்டை ஒன்றியம், மெய்குடிப்பட்டி கிராமத்தில் கோமாரி தடுப்பூசி போடும் பணியை புதுநகர் கால்நடை மருத்துவர் விசுவநாதன் தலைமையில், மருத்துவ குழுவினர் மேற்கொண்டனர்.

முகாமை கால்நடைத் துறை துணை இயக்குநர் ரவீந்திரன் பார்வையிட்டார். இந்த முகாம் புனல்குளம், தெத்துவாசல்பட்டி, மஞ்சப்பேட்டை ஆகிய கிராமங்களில் நடைபெற்று வருகிறது.

## விளை பொருள்களை சந்தைப்படுத்த விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி

வேளாண் விளை பொருள்களின் மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்துதல் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி பெரணமல்லூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மைத் துறையில் மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் இந்தப் பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் கோ.ரமணன் ஆலோசனையின் பேரில் நடைபெற்ற பயிற்சியை, வேளாண் விற்பனை, வணிகத் துறை வேளாண்மை அலுவலர் சண்முகம் நடத்தினார்.

இதில், நெல், தானியங்களின் மதிப்பை எவ்வாறு கூட்டலாம், அவற்றை சந்தைப்படுத்துவது எப்படி என்பது குறித்து பயிற்சி அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சங்கர், உதவியாளர்கள் மு.வெங்கடேசன், ஜெயராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி அணையிலிருந்து அதிக அளவில் நீர் வெளியேற்றம்

கிருஷ்ணகிரி அணையின் பாதுகாப்புக் கருதி அணையிலிருந்து வெளியேற்றும் நீரின் அளவு அதிகரித்துள்ளதாக பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்பெண்ணை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்துவரும் நிலையில், கிருஷ்ணகிரி அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்தது. இதையடுத்து, கிருஷ்ணகிரி அணை வேகமாக நிரம்பி வருகிறது. இதனால் அணையின் பாதுகாப்புக் கருதி அணையிலிருந்து வெளியேற்றும் நீரின் அளவு அதிகரிக்கலாம் என்பதைக் கருத்தில்கொண்டு தென்பெண்ணை ஆற்றில் பொதுமக்கள் யாரும் குளிக்கக் கூடாது என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிருஷ்ணகிரி அணையின் நீர் மட்டம் 52 அடி. இந்த நிலையில், வியாழக்கிழமை மாலை 5 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 50.95 அடியை எட்டியது. புதன்கிழமை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து 1,495 ஆகி இருந்த நிலையில், 506 கன அடி நீர் மட்டுமே வெளியேற்றப்பட்டது.

தற்போது, அணை வேகமாக நிரம்பிவரும் நிலையில், அணையின் பாதுகாப்புக் கருதி அணைக்கு வரும் 1,108 கன அடி நீரானது அப்படியே தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. தென்பெண்ணை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை அதிகரிக்கும் பட்சத்தில், கிருஷ்ணகிரி அணையிலிருந்து வெளியேற்றும் நீரின் அளவு அதிகரிக்கப்படும் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு

காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து லேசான மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரித்துள்ளது.

காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும் அதன் துணை நதிகளின் நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக

லேசான மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த இரு தினங்களாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 3,091 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்து. இது புதன்கிழமை காலை 5,152 கன அடியாக அதிகரித்தது. வியாழக்கிழமை காலை நீர்வரத்து மேலும் அதிகரித்து 6,086 கன அடியானது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து சற்று மீண்டுள்ளது.

வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 82.43 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி

டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கும் நொடிக்கு 15,600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 44.42 டி.எம்.சியாக இருந்தது. காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால், அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

### ஏற்காடு காபி வாரியத்தில் விதை பதிவு தொடக்கம்

ஏற்காடு காபி வாரியத்தில் காபி விதைக்கான பதிவு தொடங்கியது.

இந்த ஆண்டுக்கான காபி விதை பதிவு அக்டோபர் 31 வரை நடைபெறவுள்ளது. அராபிகா மற்றும் ரொபஸ்டா காபி விதைகள் பெறுவதற்கு கிலோவுக்கு ரூ.200 கட்டணத்தை பணமாகவோ,

பணவிடையாகவோ ஏற்காடு காபி வாரியத்தில் அளித்து பதிவு செய்து கொள்ளலாம்.

காபி விதைகள் பெறும் போது 5 சதவீதம் மதிப்பு கூட்டுவரி பெறப்படும். இதற்கான விண்ணப்பங்கள் காபி வாரிய அலுவலகத்தில் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த வாய்ப்பை ஏற்காடு சேர்வராயன் மலை, வத்தல் மலை மற்றும் கல்வராயன் மலை பகுதிகளில் உள்ள காபி விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04281- 222437 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று ஏற்காடு காபி வாரிய முதுநிலை தொடர்பு அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

## விலை உயர்வை கட்டுப்படுத்த மேலும் ஆயிரம் டன் வெங்காயம் இறக்குமதி மத்திய அரசு முடிவு



புதுடெல்லி,

வெங்காயம் விலை உயர்ந்து வரும் நிலையில், மத்திய அரசு ஏற்கனவே 2 ஆயிரம் டன் வெங்காயத்தை சீனா மற்றும் எகிப்தில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிலையில், மேலும் ஆயிரம் டன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய நேற்று முடிவு செய்தது. மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை மந்திரி ராம்விலாஸ் பஸ்வான் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

உள்நாட்டு வரத்தை அதிகரிக்கவும், விலை உயர்வை கட்டுப்படுத்தவும் வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதாக ராம்விலாஸ் பஸ்வான் நிருபர்களிடம் கூறினார். டெல்லியில் மானிய விலையில் வெங்காயம்

விற்பனை செய்து வரும் டெல்லி மாநில அரசு, தொடர்ந்து அப்பணியை செய்ய வேண்டும் என்றும் பஸ்வான் வலியுறுத்தினார்.

## வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் மேலும் 4 நாட்களுக்கு சில இடங்களில் மழை பெய்யும் வானிலை மையம் தகவல்




சென்னை,

வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் மேலும் 4 நாட்களுக்கு சில இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

<u>சென்னையில் மழை</u>

தென் மேற்கு பருவமழை கர்நாடகத்தின் வடக்கு பகுதியிலும், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களிலும் தீவிரம் அடைந்துள்ளது.

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்று முன்தினம் இரவு கரு மேகங்கள்திரண்டு பலத்த காற்றுடன் மழை பெய்தது. சென்னை எழும்பூர், வேப்பேரி, நுங்கம்பாக்கம், கீழ்பாக்கம், மயிலாப்பூர்,வடபழனி,

தியாகராயநகர், கோயம்பேடு, அண்ணாநகர், அரும்பாக்கம், அம்பத்தூர், ஆவடி, திருவான்மியூர், தாம்பரம், மாடம்பாக்கம், சேலையூர் உள்பட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

மழையின் காரணமாக சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கிக்கிடந்தது.

<u>கார்மீது மரம் விழுந்தது</u>

மழையின் காரணமாக கீழ்பாக்கம் கார்டன் லட்சுமி தெருவில் மரம் ஒன்று வேருடன் விழுந்தது. விழும்போது மரத்தின் பெரும்பகுதி ஒரு காரின் மீது விழுந்துவிட்டது. இதில் கார் பலத்த சேதம் அடைந்தது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் சில இடங்களில் மேலும் 4 நாட்களுக்கு பெய்யும் என்று வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள் கூறியதாவது:–

<u>4 நாட்கள் மழை நீடிக்கும்</u>

வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது. எங்கெல்லாம் மேகம் திரள்கிறதோஅங்கு எல்லாம் மழை பெய்கிறது. இந்த மழை 14–ந்தேதி வரை (4 நாட்கள்) நீடிக்கும். ஆனால் தமிழ்நாட்டில் சில இடங்களில் மட்டும் பெய்யும். தமிழ்நாடு முழுவதும் பெய்யாது.

இவ்வாறு அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று காலை 8–30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

<u>சென்னையில் 5 செ.மீ.மழை</u>

செம்பரம்பாக்கம் 8 செ.மீ., தக்கலை 7 செ.மீ., செய்யாறு, வந்தவாசி, சென்னை நுங்கம்பாக்கம், குளச்சல் தலா 5 செ.மீ., ஸ்ரீபெரும்புதூர், மயிலாடி, சமயபுரம், லால்குடி, சென்னை அண்ணாபல்கலைக்கழகம் தலா 4 செ.மீ., சென்னை விமானநிலையம், கொளப்பாக்கம், உத்திரமேரூர், கேளம்பாக்கம்,செஞ்சி, திண்டிவனம், சென்னை டி.ஜி.பி.அலுவலகம்,

தரமணி, காஞ்சீபுரம், காட்டுக்குப்பம், புள்ளம்பாடி, குழித்துறை, பூதப்பாண்டி, தாம்பரம், நாகர்கோவில் தலா 3 செ.மீ.

காட்டுமன்னார்கோவில், மதுராந்தகம், செங்கல்பட்டு, பாபநாசம், வால்பாறை, கன்னியாகுமரி தலா 2 செ.மீ.

## எந்திரம் மூலம் நெல் நாற்றுகளை நடவு செய்தால் அதிக மகசூல் பெறலாம் துணை இயக்குனர் தகவல்



ஆனைமலை,

எந்திரம் மூலம் நெல் நாற்றுகளை நடவு செய்தால் அதிக மகசூல் பெறலாம் என்று மத்திய அரசின் வேளாண்மை திட்ட துணை இயக்குனர் முகமது இக்பால் கூறினார்.

குறுவை நெல் சாகுபடி

ஆனைமலையில் தற்போது 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. நெற்கதிர்கள் வளர்ந்த நிலையில் விரைவில் அறுவடை நடைபெற உள்ளது. இதையடுத்து 2–ம் போக சம்பா சாகுபடிக்கு விவசாயிகளை தயார்படுத்தும் பணி வட்டார வேளாண்மை விரிவாக்கம் மையம் சார்பில் நடைபெற்று வருகிறது.

மேலும் சம்பா பருவத்தில் 750 ஏக்கர் பரப்பளவில் எந்திரம் மூலம் நடவு செய்வதற்கு ஏக்கருக்கு ரூ.1,200 மானியம் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

<u>ஆய்வு</u>

இந்த நிலையில் நடப்பு குறுவை பருவத்தில் எந்திரம் மூலம் நெல்நடவு செய்த நெல் வயல்களை மத்திய அரசின் வேளாண்மை திட்ட துணை இயக்குனர் முகமது இக்பால் திடீரென்று ஆய்வு செய்தார். அவர் பெரியணை பகுதியில் உள்ள நெல்வயலில் வளர்ந்துள்ள நெற்பயிர்களை ஆய்வு செய்தார்.

அப்போது நெற்கதிர்கள், பயிர் தூர்களின் எண்ணிக்கை, பயிர்களின் இடைவெளி வளர்ச்சி உள்பட பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்தார். பின்னர் இது குறித்து துணை இயக்குனர் முகமது இக்பால் நிருபர்களிடம் கூறியதாவது:–

<u>வித்தியாசம்</u>

நெல்நடவு எந்திரம் மூலம் நடவு செய்தால் போதிய இடைவெளி விட்டு நாற்று நடவு செய்ய முடியும். ஒரே சீராக நாற்றுகள் நடவு செய்யப்படுவதால், ‘கோனாவீடர்’ என்ற கருவி மூலம் களைச்செடிகளை உரமாக மாற்றி விடலாம். இதனால் ஒரு நாற்றில் குறைந்தபட்சம் 50 முதல் 100 தூர்கள் வரை வளர்வதை காணமுடியும்.

பாரம்பரிய நடவு வயலுக்கும், எந்திர நடவு செய்யப்பட்ட நெல் வயலுக்கும் அதிக வித்தியாசம் உள்ளதை நேரடியாக பார்க்க முடிந்தது. விவசாயிகளும் நேரில் பார்த்து அறிந்துள்ளனர். எந்திரம் மூலம் நாற்றுகள் நடவு செய்யும் போது அதிக மகசூல் பெற முடியும். வரும் சம்பா

பருவத்தில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வீதம் 750 ஏக்கரில் எந்திர நாற்று நடவு மேற்கொள்ள மானியம் வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது வட்டார வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குனர் சிவக்குமார், வேளாண்மை அலுவலர் மைதிலி, துணை வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள் சகாப்தீன், ஜாபர்அலி, செல்வகுமார், ராமகிருஷ்ணன் உள்பட வேளாண்மை அதிகாரிகள் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு ரூ.19 லட்சம் மதிப்பிலான பொருளீட்டுக் கடன் உதவிகளுக்கான காசோலை குறிஞ்சிப்பாடி கூட்டத்தில் கலெக்டர் சுரேஷ்குமார் வழங்கினார்



கடலூர்,

விவசாயிகளுக்கு ரூ.19 லட்சம் மதிப்பிலான பொருளீட்டுக்கடன் உதவிகளுக்கான காசோலைகளை குறிஞ் சிப்பாடியில் நடந்த கூட்டத்தில் கலெக்டர் சுரேஷ்குமார் வழங்கினார்.

ஒருங்கிணைப்பு கூட்டம்

குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் விவசாயிகள், வியாபாரிகள் ஒருங்கிணைப்பு கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கி, விவசாயிகளுக்கு ரூ.19 லட்சம் மதிப்பிலான பொருளீட்டுக்கடன் உதவிகளுக்கான காசோலைகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

விருத்தாசலம் முதன்மை

மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் 10 ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 6 ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்

சொந்த கட்டிடத்திலும், மற்ற 4 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் அதிக வரத்து வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விருத்தாசலம் முதன்மை வகிக் கிறது.

மாவட்டத்தில் கடந்த நிதியாண்டில் 2 லட்சத்து 2 ஆயிரத்து 770 மெட்ரிக் டன் வேளாண் விளை பொருட்களை விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விற்று பயன் அடைந்துள்ளனர். மேலும் அறுவடை காலங்களில் விலை குறைவாக இருக்கும் போது, விவசாயிகளின் நஷ்டத்தை தடுக்கும் வகையில் கடந்த ஆண்டில் 7 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் இருப்பு வைத்து 5 சதவீதம் குறைந்த வட்டிக்கு ரூ. 112.95 லட்சம் கடன் பெற்று விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

<u>899 வியாபாரிகளுக்கு உரிமம்</u>

வியாபாரிகள் 2 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் இருப்பு வைத்து ரூ.52.10 லட்சம் பொருளீட்டுக்கடன் பெற்று பயன் பெற்றுள்ளனர். இந்த நிதியாண்டில் பொருளீட்டுக்கடனுக்காக அரசு ரூ.1 கோடியே 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இது நாள் வரை விவசாயிகளுக்கு ரூ.75.45 லட்சம் மற்றும் விவசாயிகளுக்கு ரூ.23 லட்சம் பொருளீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் கடந்த மாதம் வரை 43 ஆயிரத்து 141 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்களை விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விற்பனை பயன்அடைந்துள்ளனர்.

கடந்த நிதியாண்டில் 1105 வியாபாரிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 899 வியாபாரிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வணிகர்கள் அனைவரும் விற்பனைக்குழு உரிமத்தை பெற்று விற்பனை கூடங்களில் விவசாய விளைபொருட்களை கொள்முதல் செய்து பயன்அடையலாம்.

மேலும் குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்தின் சார்பில் 2014–2015–ம் ஆண்டில் 2ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு உடைய சேமிப்பு கிட்டங்கி கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணிகள் வேளாண் பொறியியல் துறையால் தொடங்கப்படும்.

இவ்வாறு கலெக்டர் சுரேஷ்குமார் பேசினார்.

முன்னதாக அனைவரையும் குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் பன்னீர் செல்வம் வரவேற்றார். கூட்டத்தில் விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஒழுங்குமுறை விற்பனை கூட மேற்பார்வையாளர் திருமுருகன் நன்றி கூறினார்.

## வடகிழக்கு பருவமழை காலத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை பொதுமக்கள் தகவல் தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண்



திண்டுக்கல்,

வடகிழக்கு பருவமழை காலத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, பொதுமக்கள் தகவல் தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் வசதி செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணைக்குழு கூட்டம் நடந்தது. இதற்கு கலெக்டர் ஹரிகரன் தலைமை தாங்கினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் நாகேந்திரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) சேதுராமன், ஆர்.டி.ஓ.க்கள் சுரேஷ், மனோகரன் உள்பட அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். அப்போது கலெக்டர் ஹரிகரன் பேசியதாவது:–

முன்னெச்சரிக்கை பணிகள்

வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் தொடங்க உள்ளது. இந்த பருவமழை டிசம்பர் மாதம் வரை பெய்யக்கூடும். அப்போது கனமழையால் ஏற்படும்
சேதங்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கடந்த வடகிழக்கு பருவமழை காலத்தில் கனமழை அதிகமாக இல்லை.

எனினும், தற்போது வடகிழக்கு பருவமழை அதிகமாக பெய்வதற்கு உரிய காலசூழ்நிலை நிலவுகிறது. எனவே, கடந்த காலங்களில் கனமழையின் போது பெற்ற அனுபவங்களை மனதில் கொண்டு நிவாரண பணிகள், போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்டணமில்லா தொலைபேசி

கலெக்டர் அலுவலகம், ஆர்.டி.ஓ. அலுவலகங்கள், தாலுகா அலுவலகங்களில் பேரிடர் மேலாண்மை சிறப்பு கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அமைக்க வேண்டும். மேலும் இயற்கை இடர்பர்டுகளின் போது கலெக்டர் அலுவலகத்தை தொடர்புகொண்டு, பொதுமக்கள் தகவல் தெரிவிக்க கட்டணமில்லா 1077 என்ற தொலைபேசி எண் வசதி செய்யப்பட்டுள்ளது.

புயல், வெள்ளத்தால் பாதிக்க நேரிட்டால் பொதுமக்கள் தங்குவதற்கு பள்ளிகள், கட்டிடங்கள், திருமண மண்டபங்களை தேர்வு செய்ய வேண்டும். மேலும் அந்த கட்டிடங்களின் உறுதித் தன்மையை பொதுப்பணித் துறையினர் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் அதில் மின்சாரம், குடிநீர், கழிப்பிட வசதிகளை பயன்பாட்டில் வைக்க வேண்டும்.

<u>குள ஆக்கிரமிப்பு அகற்றம்</u>

அதேபோல் அக்டோபர் 2–ந்தேதி நடைபெறும் கிராமசபை கூட்டத்தில், வடகிழக்கு பருவமழை தொடர்பாக விவாத தலைப்பை சேர்க்க வேண்டும். பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதுதவிர குளங்கள், கண்மாய்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தண்ணீர் சீராக செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். மழைக்காலம் முழுவதும் சுகாதாரத்துறையினர் தேவையான மருந்துகளை இருப்பு வைத்திருக்க வேண்டும்.

கிராம நிர்வாக அலுவலர்கள் 24 மணி நேரமும், பணிசெய்யும் கிராமங்களில் தங்கி நிவாரண பணிகளை மேற்கொள்ள வேண்டும். வடகிழக்கு பருவமழை காலத்தில் இயற்கை இடர்பாடுகளை எதிர்கொள்ள அனைத்து துறையினரும் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் ஹரிகரன் பேசினார்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் 4 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய இலக்கு



திண்டுக்கல்,

திண்டுக்கல் மாவட்டத்தில் நடப்பாண்டில் 4 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

<u>உணவு தானியம்</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாக இருந்து வருகிறது. அந்த வகையில், நெல், மக்காச்சோளம், உளுந்து, துவரை, சோளம், கம்பு உள்ளிட்டவை சாகுபடி செய்யப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக மாவட்டம் முழுவதும் மழைப்பொழிவு குறைந்தது. இதனால், பலரும் விவசாயத்தை கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், விவசாய சாகுபடி பரப்பும் பரவலாக குறைந்து வருகிறது. கடந்த ஆண்டுகளில் வறட்சியின் பிடியில் திண்டுக்கல் சிக்கி இருந்தபோதிலும், கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட உணவு தானிய உற்பத்தி

இலக்கை விட அதிகம் உற்பத்தி செய்யப்பட்டதாக விவசாய துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

உற்பத்தி இலக்கு

இந்த நிலையில், நடப்பு ஆண்டுக்கான உணவு தானிய உற்பத்தி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் 20 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் 1 லட்சத்து 2 ஆயிரத்து 700 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இதே போல், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட சிறுதானியங்கள் 78 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் 2 லட்சத்து 73 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யவும், துவரை, உளுந்து, பச்சை பயறு, தட்டை பயறு, கொண்டை கடலை உள்ளிட்ட பயறு வகைகள் 30 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் 21 ஆயிரத்து 792 மெட்ரிக் டன் அளவும் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து வேளாண்மை அதிகாரிகள் கூறியதாவது:–

உற்பத்தி அதிகரிக்கும்

கடந்த ஆண்டை பொறுத்தவரை 3 லட்சத்து 75 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நடப்பாண்டில் அதை விட கூடுதலாக உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்த இலக்கை அடைய பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகிறது.

மேலும், விவசாயிகளுக்கு நவீன முறையில் சாகுபடியை பெருக்குவதற்கான நுணுக்கங்களையும் கற்றுக்கொடுத்து வருகிறோம். இதற்காக தேவையான அளவு உரத்தையும் இருப்பு வைத்துள்ளோம். எனவே இந்த ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட உணவு தானிய உற்பத்தி அதிக அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

எண்ணெய் வித்துகளுக்கு 56 ஆயிரம் மெட்ரிக் டன் இலக்கு

திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை எள், நிலக்கடலை, ஆமணக்கு உள்ளிட்ட எண்ணெய் வித்துகளும் பயிரிடப்படுகின்றன. இவை உணவு தானியத்தில் வருவதில்லை. இவற்றின் உற்பத்திக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதன்படி மாவட்டம் முழுவதும் 18 ஆயிரத்து 450 ஹெக்டேர் நிலப்பரப்பில் எண்ணெய் வித்துகளை பயிரிடவும், அதன் மூலம் 56 ஆயிரத்து 390 மெட்ரிக் டன் உற்பத்தியை பெறவும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

<u>பருவம் தவறி பெய்யும் மழையால் சிக்கல்</u>

இந்த ஆண்டை பொறுத்தவரை ஜனவரி மாதம் முதல் இதுவரையிலும் சராசரி அளவை விட அதிக மழை பெய்துள்ளது. ஆனால், எந்த குளத்திலும் தண்ணீர் இல்லை. பல்வேறு இடங்களில் கடுமையான வறட்சியே நிலவி வருகிறது. இதற்கு பருவம் தவறி பெய்யும் மழைதான் காரணம் என்று வேளாண்மை அதிகாரிகள் கூறுகின்றனர். தொடர்ச்சியாக மழை பெய்யாமல் இருப்பது, உரிய பருவத்தில் பெய்யாமல் முறையற்று பெய்வது உள்ளிட்ட காரணங்களினால் தண்ணீரை சேமிப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. இதனால் விவசாயம் கடுமையான பாதிப்பை சந்திக்கிறது என்கிறார்கள் அவர்கள்.

## கோமாரிநோய் தடுப்பூசி முகாம் குறித்து கால்நடை வளர்ப்போருக்கு தொலைபேசிமூலம் தகவல் தெரிவிக்கப்படும் உதவி இயக்குனர் தகவல்



கோபி,

கோமாரி நோய் தடுப்பூசி போடுவது குறித்து கால்நடை வளர்ப்போருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்படும் என்று கால் நடை உதவி இயக்குனர் மணிசேகரன் கூறினார்.

<u>தடுப்பூசி முகாம்</u>

கோபி அருகே உள்ள குட்டியாக்கவுண்டன் புதூரில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் அமைக்கப்பட்டு உள்ளது. இதில், கடுக்காம்பாளையம் கால்நடை டாக்டர் குழந்தைவேல் தலைமையில் மருத்துவக்குழுவினர் 100–க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர். இந்த முகாமினை கோபி கால்நடை உதவி இயக்குனர் டாக்டர் மணிசேகரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறும்போது, ‘கோபி கோட்டத்துக்கு உள்பட்ட கிராமங்களில் தேசிய கோமாரி நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் சிறப்பு முகாம் மூலம் குழுக்கள் அமைக்கப்பட்டு கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகள், கால்நடைகள் பராமரிப்பவர்களிடம்

தொலைக்காட்சி, துண்டுபிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அறிவிக்கப்படும்

தற்போது புதிதாக விவசாயிகளுக்கும், கால்நடை பராமரிப்பவர்களுக்கும் தொலைபேசி மற்றும் செல்போன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் கால்நடைகள் வளர்ப்பவர்கள் தங்கள் செல்போன் எண்ணை அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் பதிவு செய்து கால்நடை பராமரிப்பு துறையின் திட்டங்களை தெரிந்து கொள்ள வேண்டும். இதில் செல்போனில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும் இடம் மற்றும் தேதி தெரிவிக்கப்படும்' என்றார்.

## வேளாண்மைத்துறை திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது



கிருஷ்ணகிரியில் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது.

ஆய்வுக்கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது:-

வேளாண்மை மற்றும் அதன் இதர துறைகளில் செயல்படுத்தப்படும் புதிய தொழில் நுட்பங்களை அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு விவசாயிகளின் வயல்களில் முழுவதுமாக செயல்படு¢த்தப்பட்டு வருகிறது. மேலும், அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு அறுவடையின் பின் செய் நேர்த்தி,

மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு மற்றும் வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்து பயிற்சி ஆகியவை நடத்தப்படுகிறது.

வேண்டுகோள்

இதை விவசாயிகள் முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நெல் நடவு எந்திரம் மூலம் நடவு செய்தல், ராகி மற்றும் நிலக்கடலை பயிர்களை நவீன விதைப்பு கருவி மூலம் விதைப்பு செய்தல், துவரை நாற்று நடவு மற்றும் இயற்கை வேளாண்மை போன்ற நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் அதற்கான மானியங்களை பெற விவசாயிகள் வேளாண்மைத்துறையை தொடர்பு கொண்டு திட்டங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை செயல்படுத்திட வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் ராஜேஷ் கூறினார். இந்த கூட்டத்தில் வேளாண்மை துறை இணை இயக்குனர் சபாநடேசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) சுமதி, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபால், வேளாண்மை துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) ரவி,¢ வேளாண்மை துணை இயக்குனர் ரவீந்தர், வேளாண் வணிக துணை இயக்குனர் காளியப்பன், தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) நர்குந்த் மற்றும் விவசாய சங்க தலைவர்கள் ராமகவுண்டர், தாசப்பா மற்றும் லோகபிராம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிலோ ரூ.300–க்கு விற்பனை செய்யப்படுவதால் ஸ்ட்ராபெரி பழ சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்



ஊட்டி,

கிலோ ரூ.300–க்கு விற்பனை செய்யப்படுவதால் ஸ்ட்ராபெரி பழ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஸ்ட்ராபெரி பழங்கள்

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், பீன்ஸ் உள்பட பல்வேறு வகையான காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல் பிளம்ஸ், பிச்சீஸ், ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட பழ வகைகளும் விளைவிக்கப்படுகிறது. இங்கு விளையும் பழங்கள் மிகவும் சுவையுடன் காணப்படுவதோடு, அதிக சத்துக்கள் கொண்டதாகவும் விளங்குகிறது.

இந்த நிலையில் ஊட்டி, கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தற்போது ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக பசுமை குடில்களை அமைத்து அதில் ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

ஒரு வருட பயிர்

இதுகுறித்து ஊட்டி அருகே கட்டபெட்டு பகுதியில் ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி செய்து வரும் விவசாயி குணசீலன் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி செய்ய ஏற்ற காலநிலை நிலவுகிறது. இங்கு பசுமை குடில்கள் அமைத்து ஸ்ட்ராபெரி

நாற்றுகள் நடவு செய்யப்படுகின்றன. இவற்றுக்கு சொட்டுநீர் பாசனம் முறையில் நீர்பாய்ச்சப்படுகிறது.

ஒரு வருட பயிரான ஸ்ட்ராபெரி செடியானது நடவு செய்யப்பட்ட 3–வது மாதத்தில் காய்க்க தொடங்கிவிடும். பின்னர் ஒரு வருடகாலம் வரை வாரத்திற்கு ஒரு முறை என தொடர்ந்து ஸ்ட்ராபெரி பழங்களை பறிக்க முடியும். காய்க்கும் போது பச்சை நிறத்தில் காட்சியளிக்கும் இந்த பழம், பழுத்தவுடன் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும்.

<u>பூச்சிக்கொல்லி மருந்துகள்</u>

திறந்த வெளியில் ஸ்ட்ராபெரியை சாகுபடி செய்தால் பறவைகள், எலிகள் போன்றவை அதிக சேதத்தை ஏற்படுத்தும். மேலும் வெயில் மற்றும் மழையினாலும் ஸ்ட்ராபெரி செடிகள் பாதிக்கப்படும் என்பதால் பசுமை குடில்கள் அமைத்து அதனுள் சாகுபடி செய்யப்படுகிறது.

இதற்கு தேவையான தண்ணீர் மற்றும் உரம், பூச்சிகொல்லி மருந்துகள் சொட்டு நீர்பாசனம் மூலம் அளிக்கப்படுகிறது. இதனால் சாகுபடி செய்ய குறைந்த செலவே ஆகிறது. தற்போது அறுவடை செய்யப்படும் ஸ்ட்ராபெரி பழமானது ஒரு கிலோவிற்கு 300 ரூபாய் வரை விற்பனையாகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தற்போது ஸ்ட்ராபெரி பழத்தின் தேவை அதிகமாக உள்ளதால் உற்பத்தியாகும் ஸ்ட்ராபெரி பழமானது நீலகிரி மாவட்டத்திலேயே விற்பனை செய்யப்படுகிறது. இதனை சுற்றுலா பயணிகளும் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் காய்கறி செடிகளில் எரிப்பூச்சி நோய் தாக்குதல் அதிகரிப்பு



கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் காய்கறி பயிரில் பச்சை எரிப்பூச்சி நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால் வேளாண்மை துறையினர் தகுந்த ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

<u>எரிப்பூச்சி நோய் தாக்குதல்</u>

தேனி மாவட்டம் கம்பம், கூடலூர், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை, வாழை, திராட்சைக்கு அடுத்தபடியாக நூற்றுக்கணக்கான ஏக்கரில் பீட்ரூட், நூக்கல், முள்ளங்கி உள்ளிட்ட காய்கறி பயிர்கள் பயிர் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக கம்பம் பகுதியில் பெய்து வரும் தொடர் சாரல் மழையின் காரணமாக இந்த காய்கறி பயிரில் பச்சை எரிப்பூச்சி நோய் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டு வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>முள்ளங்கி செடி</u>

நோய் தாக்குதல் உள்ள பகுதிகளில் தோட்டக்கலைத்துறையினர் நேரில் பார்வையிட வேண்டும். அவ்வப்போது காய்கறி செடிகளை ஆய்வு செய்து நோய் தாக்குதலை தடுக்க நடவடிக்கைகளும், மருந்து தெளிப்பு விவரங்கள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து அப்பகுதி விவசாயிகளிடம் கேட்ட போது, 'முள்ளங்கி பயிரிட்டு உள்ளோம். அந்த செடிகளில் எரிப்பூச்சி நோய் தாக்குதலின் காரணமாக முதலில் இலைகள் முழுவதையும் பூச்சிகள் தின்று விடுகின்றன. பின்னர் படிப்படியாக முள்ளங்கியை தின்று விடுவதால் அவை வீணாகி விடுகின்றன. அதனை விற்பனைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை உள்ளது. அதனால் மகசூல் பாதிப்பு அதிகம் ஏற்பட்டு நஷ்டம் அடைந்து வருகிறோம்' என்றனர்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் சரிவு



கூடலூர்,

முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை

இல்லாததால் நீர்மட்டம் தொடர்ந்து சரிவு ஏற்பட்டு உள்ளது. இதனால் 2-ம் போக பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.

முல்லைப்பெரியாறு அணை

தேனி மாவட்டத்தில் கூடலூர் லோயர்கேம்பில் இருந்து பழனிசெட்டிபட்டி வரை சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பளவில் இருபோக நெல் விவசாய பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பகுதிகள் முல்லைப்பெரியாறு அணை மூலம் பாசன வசதி பெற்று வருகின்றன. கூடலூர், கம்பம், உத்தமபாளையம், கோம்பை ஆகிய பகுதிகளுக்கு முல்லைப்பெரியாற்றில் இருந்து லோயர்கேம்ப் கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்த விடப்படுவது வழக்கம். இந்த ஆண்டும் கடந்த ஜூன் 2-ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து அந்த பகுதிகளில் நடவுப்பணிகள் முடிந்து தற்போது நெற்பயிர்கள் விளைச்சல் அடைந்து உள்ளது. அடுத்த மாதம் (அக்டோபர்) முதல் வாரத்தில் அறுவடை பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்மட்டம் குறைவு

இந்நிலையில் முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய அளவு மழை இல்லாததால் நீர்வரத்து குறைந்து உள்ளது. அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது. கடந்த ஆண்டு இதே மாதத்தில் அணையின் நீர்மட்டம் 132.60 அடியாக இருந்தது. நேற்று அணையின் நீர்மட்டம் 117.50 அடியாக காணப்பட்டது. கடந்த

ஆண்டை விட 15 அடி குறைவாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 497 கனஅடி நீர்வரத்து இருந்தது. வினாடிக்கு 700 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. அணையில் 2,177 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

விவசாயிகள் கவலை

அணையில் குறைந்த அளவே தண்ணீர் உள்ளதால் மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக மட்டுமே தண்ணீர் திறக்கப்படும் நிலை உள்ளது. இதனால் 2-ம் போக பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு (மில்லிமீட்டரில்):-

முல்லைப்பெரியாறு அணை- 18.2, தேக்கடி - 3.8.

தினகரன்

**விலையை கட்டுப்படுத்த மேலும் 1,000 டன் வெங்காயம் இறக்குமதி: மத்திய அமைச்சர் தகவல்**



புதுடெல்லி: வெங்காயம் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்து, நாட்டின் பல பகுதிகளிலும் கிலோ ரூ. 80ஐ எட்டி விட்டது. சந்தைக்கு வரத்தை அதிகரித்து விலையை கட்டுப்படுத்த ஏற்கெனவே இரண்டு டெண்டர்கள் மூலம் தலா 1,000 டன் வெங்காயம் சீனா மற்றும் எகிப்தில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதித்துள்ளது.

இந்நிலையில் விலையை கட்டுப்படுத்த மேலும் 1,000 டன் வெங்காயம் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் நேற்று தெரிவித்தார். இதற்கான டெண்டர் விரைவில் வெளியிடப்படும். இதுபோல், விலை கட்டுக்குள் வரும் வரை மானிய விலையில் வெங்காயம் விற்பனையை தொடருமாறு டெல்லி அரசு மற்றும் மதர்டெய்ரிக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

**வறட்சியால் பாதிப்பு மா, தென்னைக்கு இழப்பீடு வேண்டும் அரசுக்கு விவசாயிகள் வலியுறுத்தல்**

கோபால்பட்டி, : சாணார்பட்டி பகுதிகளில் பட்டுப்போன மா,தென்னை மரங்களுக்கு இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சாணார்பட்டி பகுதிகளில் உள்ள அஞ்சுகுழிப்பட்டி, சிலுவத்தூர், வடகாட்டுப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் தென்னை அதிகம் சாகுபடி

செய்யப்பட்டு உள்ளது.இதேபோல் அஞ்சுகுழிப்பட்டி,வேம்பார்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மா சாகுபடி அதிகம் உள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக இப்பகுதியில் பருவமழை பொய்த்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தென்னை, மாமரங்கள் பெருமளவில் பட்டுப்போய் விட்டன. ஆடி மாதத்திலும் பருவமழை பொய்த்தது. தற்போது இப்பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது.இதனால் மா,தென்னை மரங்கள் கருகி வருகின்றன. ஏற்கனவே நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்த மா,தென்னை பட்டுப்போனதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, மிகவும் சிரமமான சூழ்நிலையில் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில் தென்னை,மா மேலும் பட்டுப்போய் வருவதால் தமிழக அரசு பட்டுப்போன மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து விவசாய சங்க தலைவர் கண்ணுமுகமது கூறுகையில், கடந்த 6 ஆண்டுகளாக இப்பகுதியில் பருவமழை பொய்த்து விட்டது. மா, தென்னை மரங்கள் பெருமளவில் பட்டுப்போய் விட்டன. இதனால் விவசாயிகள் தங்களுடைய நிலங்களை விற்றுவிடும் அளவிற்கு போய் விட்டனர். மாற்றுத்தொழில் செய்ய வழியின்றி பரிதவித்து வருகின்றனர். எனவே விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு தமிழக அரசு மா,தென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

**வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை வீழ்ச்சி தக்காளி ரூ.3**

ஒட்டன்சத்திரம்,: ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு காய்கள் வரத்து அதிகரிப்பால் விலை குறைந்து உள்ளது. தக்காளி கிலோ ரூ.3க்கு விற்பனையானது.ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு

ஒட்டன்சத்திரம் மற்றும் அருகேயுள்ள மாவட்டங்கள், ஆந்திரா,கர்நாடகா,மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்தும் அதிகளவில் காய்கறிகள் வருகிறது. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், 90 சதவீதம் அளவிற்கு கேரளாவிற்கும் அனுப்பப்படுகிறது.

தினமும் 400 முதல் 500 டன் காய்கறிகள் வந்து விற்பனையாவதால், ரூ.5 கோடி வரை வர்த்தகம் நடக்கிறது. இந்நிலையில் விளைச்சல் அதிகமாகி காய்கறிகள் வரத்து அதிகரிப்பால், விலை குறைந்து வருகிறது. இதனால் காய்கறிகளை பறிப்பு செலவுக்கு கூட கட்டுபடியாக வில்லை என்று விவசாயிகள் கூறினர்.நேற்று தக்காளி 14 கிலோ பெட்டி ரூ.40க்கு விற்பனை ஆகிறது. அதாவது கிலோ ரூ.3க்கும், சுரக்காய் கிலோ ரூ.2, செடி முருங்கை ரூ.9, மரமுருங்கை ரூ,6,கொத்தவரை ரூ.5, பீன்ஸ் ரூ.13, டிஸ்கோ கத்தரி ரூ.3 பச்சை கத்தரி ரூ.10, அவரை ரூ. 14,வெண்டை ரூ.3 புடலை ரூ.3 பூசணி கிலோ ரூ.5 என விற்பனையானது.

**விசை உழுவை இயந்திரம் வாங்க விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரம் மானியம் கலெக்டர் தகவல்**

நெல்லை, : தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் விசை உழுவை இயந்திரம் வாங்க விவசாயிகளுக்கு ரூ.75 ஆயிரம் அதிகபட்ச மானியம் வழங்கப்படுவதாக கலெக்டர் கருணாகரன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: நெல்லை மாவட்டத்திற்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் விசை உழுவை இயந்திரம் வாங்க ரூ.40 ஆயிரம் முதல் ரூ.75 ஆயிரம் வரை மானியம் வழங்கப்பட உள்ளது.

அதன்படி 8 குதிரை சக்திக்கு குறைவான விசை உழுவை இயந்திரத்திற்கு சிறுகுறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியமாக ரூ.50 ஆயிரமும், இதர விவசாயிகளுக்கு ரூ.40 ஆயிரமும் பணி முடிவு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.8 குதிரை சக்திக்கு அதிகமான மின் உழுவை இயந்திரம் வாங்க சிறுகுறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு அதிகபட்ச மானிய தொகையாக ரூ.75 ஆயிரம் (ஒரு இயந்திரத்திற்கு) வழங்கப்பட உள்ளது. இதர விவசாயிகளுக்கு ரூ.60 ஆயிரமும் அதிகபட்ச மானியமாக வழங்கப்பட உள்ளது.

விசை உழுவை இயந்திரம் வாங்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
வேளாண் பொறியியல் துறை, தலைமை பொறியாளர் அங்கீகரித்துள்ள நிறுவனங்களில் தங்கள் விருப்பப்படி ஏதேனும் ஒரு நிறுவனத்தை தேர்வு செய்ய வேண்டும். அந்த நிறுவனத்தில் விசை உழுவை இயந்திரத்தை முழு விலையில் வாங்கி அதற்குரிய விலைப்பட்டியல்கள் மற்றும் புகைப்பட ஆதாரங்களுடன் விண்ணப்பித்தால் தகுதியான விவசாயிகளுக்கு மானியம் அவரது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு போதிய உரம் இருப்பு: கலெக்டர் மதிவாணன் தகவல்



திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நடப்பு சம்பா பருவத்தில் திருவாரூர் மாவட்டத்தில் 3,75,250 ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு இதுவரை திருந்திய நெல் சாகுபடி முறை மற்றும் நேரடி விதைப்பின் மூலம் 1,08,785 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சம்பா சாகுபடிக்குத் தேவையான விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் 487 மெட்ரிக் டன்னும், தனியார் கடைகளில் 1430 மெட்ரிக் டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவையான உரங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் தற்போது யூரியா 6,014 மெட்ரிக் டன்னும், டிஏபி 2,463 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 2,927 மெட்ரிக் டன்னும் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் 450 மெட்ரிக் டன்னும் இருப்பில் உள்ளது.

வேம்பு கலந்த யூரியா 50 கிலோ மூட்டை ரூ.284–க்கும், வேம்பு கலக்காத யூரியா ரூ.270–க்கும், டிஏபி ரூ.1225–க்கும், பொட்டாஷ் ரூ.800–க்கும், 20:20:0:13 காம்ப்ளக்ஸ் ரூ.911–க்கும் மற்றும் 17:17:17 காம்ப்ளக்ஸ் ரூ.1102–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் அனைவரும் உரிய விலைக்கு உரங்களை வாங்கி பயன்பெறலாம்.

நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்தால் உரக்கட்டுப்பாடு ஆணை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சட்டப்படியும் தகுந்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## விலை உயர்வை கட்டுப்படுத்த மேலும் ஆயிரம் டன் வெங்காயம் இறக்குமதி: மத்திய அரசு முடிவு



வெங்காயம் விலை உயர்ந்து வரும் நிலையில், மத்திய அரசு ஏற்கனவே 2 ஆயிரம் டன் வெங்காயத்தை சீனா மற்றும் எகிப்தில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிலையில், மேலும் ஆயிரம் டன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய நேற்று முடிவு செய்தது. மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை மந்திரி ராம்விலாஸ்

பஸ்வான் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

உள்நாட்டு வரத்தை அதிகரிக்கவும், விலை உயர்வை கட்டுப்படுத்தவும் வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதாக ராம்விலாஸ் பஸ்வான் நிருபர்களிடம் கூறினார். டெல்லியில் மானிய விலையில் வெங்காயம் விற்பனை செய்து வரும் டெல்லி மாநில அரசு, தொடர்ந்து அப்பணியை செய்ய வேண்டும் என்றும் பஸ்வான் வலியுறுத்தினார்.

## வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் மேலும் 4 நாட்களுக்கு மழை பெய்யும்: வானிலை மையம் தகவல்




சென்னை,செப்.11-

தென் மேற்கு பருவமழை கர்நாடகத்தின் வடக்கு பகுதியிலும், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களிலும் தீவிரம் அடைந்துள்ளது.

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்று முன்தினம் இரவு கரு மேகங்கள்திரண்டு பலத்த காற்றுடன் மழை பெய்தது. சென்னை எழும்பூர், வேப்பேரி, நுங்கம்பாக்கம், கீழ்பாக்கம், மயிலாப்பூர்,வடபழனி,

தியாகராயநகர், கோயம்பேடு, அண்ணாநகர், அரும்பாக்கம், அம்பத்தூர், ஆவடி, திருவான்மியூர், தாம்பரம் , மாடம்பாக்கம், சேலையூர் உள்பட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

மழையின் காரணமாக சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கிக்கிடந்தது.

மழையின் காரணமாக கீழ்ப்பாக்கம் கார்டன் லட்சுமி தெருவில் மரம் ஒன்று வேருடன் விழுந்தது. விழும்போது மரத்தின் பெரும்பகுதி ஒரு காரின் மீது விழுந்துவிட்டது. இதில் கார் பலத்த சேதம் அடைந்தது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் சில இடங்களில் மேலும் 4 நாட்களுக்கு பெய்யும் என்று வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் கூறியதாவது:-

வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது. எங்கெல்லாம் மேகம் திரள்கிறதோஅங்கு எல்லாம் மழை பெய்கிறது. இந்த மழை 14-ந்தேதி வரை (4 நாட்கள்) நீடிக்கும். ஆனால் தமிழ்நாட்டில் சில இடங்களில் மட்டும் பெய்யும். தமிழ்நாடு முழுவதும் பெய்யாது.இவ்வாறு அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-செம்பரம்பாக்கம் 8 செ.மீ., தக்கலை 7 செ.மீ., செய்யாறு, வந்தவாசி, சென்னை நுங்கம்பாக்கம், குளச்சல் தலா 5 செ.மீ., ஸ்ரீபெரும்புதூர் , மயிலாடி, சமயபுரம், லால்குடி, சென்னை அண்ணாபல்கலைக்கழகம் தலா 4 செ.மீ., சென்னை விமானநிலையம், கொளப்பாக்கம், உத்திரமேரூர், கேளம்பாக்கம் ,செஞ்சி, திண்டிவனம், சென்னை டி.ஜி.பி.அலுவலகம், தரமணி, காஞ்சீபுரம், காட்டுக்குப்பம், புள்ளம்பாடி, குழித்துறை, பூதப்பாண்டி, தாம்பரம், நாகர்கோவில் தலா 3 செ.மீ.காட்டுமன்னார்கோவில், மதுராந்தகம், செங்கல்பட்டு, பாபநாசம், வால்பாறை, கன்னியாகுமரி தலா 2 செ.மீ.சென்னை புறநகர் பகுதியான தாம்பரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று முன்தினம்

இரவு பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. நள்ளிரவு 12 மணியளவில் சிட்லப்பாக்கம் பகுதியில் டிரான்ஸ்பார்மர் மீது மரக்கிளை முறிந்து விழுந்தது. இதனால் மின்தடை ஏற்பட்டது. மின்சாரம் தடை பட்டதால் ஜோதி நகர், சர்வமங்களா நகர், நேரு நகர், துரைசாமி நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் இருளில் மூழ்கின.

இது குறித்து அப்பகுதி மக்கள் நேரு நகர் மின்வாரிய அலுவலகத்துக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்ததும் மின்வாரிய ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, டிரான்ஸ்பார்மர் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் தேங்கி நின்ற மழைநீரை அப்புறப்படுத்தினர். முறிந்து கிடந்த மரக்கிளையையும் வெட்டி அப்புறப்படுத்தினர்.இதையடுத்து 4 மணி நேரம் கழித்து நேற்று அதிகாலை 4 மணியளவில் மீண்டும் அந்த பகுதிக்கு மின்சாரம் வினியோகிக்கப்பட்டது.